# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Journal Multidisilinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்

(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)

ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :26 April 2025

கோட்டை:7 வாயில்:26 ஏப்ரல் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005,
Uttar Pradesh,India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil, Chennai-600100

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study
in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com


**அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# அகத்தினுள்


தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியரான தெய்வச்சிலையாரின்
பிற உரை நுட்பங்கள்
முனைவர்.வி.சேகர்

தொல்காப்பியப் புறத்திணையியல் வெட்சித் திணையில்  பாட வேறுபாடுகள்
கு.செந்தமிழ்செல்வி

எட்டுத்தொகை - 'குறுந்தொகை'யில் செலவழுங்கல்
ஆ.கவிதா

சங்க இலக்கிய அகநூல்களில் உடன்போக்கு
மா.மகேஸ்வரி

சங்ககால அலைகுடிகளானப் பாணர்-கூத்தர் ஒப்பீடு
ப. நந்தினி

களவுத்துறைத் தலைவன் கூற்றுகளில் தொல்காப்பியரும் திருவள்ளுவரும்
திருமதி.கோ.சரண்யா

புறநானூற்றில் வல்லாண்முல்லைத் துறை உணா ்த்தும் போர்
ப.சிவாஜி

பதினெண்கீழ்க்கணக்கு 'திரிகடுகத்தில் கல்விச் சிந்தனைகள்
இரா.தீபலெட்சுமி

பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் 'திரிகடுகம்' வலியுறுத்தும் புணை நெறி
இரா.ஹேமலதா

சிலம்பில் அரசியல்
மு.உமாமகேஸ்வரி


அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**திருநாவுக்கரசரின் இறைநெறிக் கொள்கைகள்**
**முனைவர் ச.வைத்தீஸ்வரன்**

**திருமூல நாயனாரின் இல்லற அறங்கள்**
**முனைவர் ஹ.விஜயலட்சுமி**

**பெரியபுராணம்: நாயன்மார்களின் அறச் சிந்தனைகள்**
**ப.பிரபு**

**திருமாலின் அவதாரங்களும் குறியீடுகளும்**
**சா.ஜனார்த்தனன்**

**சிற்றிலக்கியங்களில் வைகுந்த வழிபாட்டு முறைகள்**
**திருமதி நா.நித்யா**

**நடன குஞ்சிதபாதம் எழுதிய மதுரைக் கதம்பத்தில் காணலாகும் உத்திகள்**
**கி. ராஜ்குமார்**

**தர்காவும் விளிம்புநிலை மக்களும்**
**முனைவர் மௌ.அஸ்கர் அலி**

**இந்தியத் தத்துவத்தின்வழி இலக்கியத்தில் இருத்தலியல்**
**முனைவர் நா. ஜிதேந்திரன்**

**சங்கதி புதினத்தில் பெண் பாத்திரப்படைப்புகள் ஓர் ஆய்வு**
**ரா.சந்தியா**

**ஜெயமோகனின் வெண்முரசு நாவலில் 'மணவிழவுச் சடங்குகள்'**
**ரா.ஹேமா சிவகா**

**கவிமதி சோலச்சி கவிதைகளில் சமூகச்சிக்கல்கள்**
**இரா.கலாவதி**



**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# அகத்தினுள்

**இலக்கியங்களில் தகவல் தொடர்பியல்**
ந.மஞ்சுளா

**மகாபரதச்சூடாமணியில் கைச் செயற்பாடுகள்**
பத்மினி. S

**EASY LEARNING TECHNIQUES**
PROF. Dr. Er. S. HARI PRASAD

**Exploring the Lesson planning process of Teachers Teaching Mathematics in Grade 9 In Batticaloa District Schools**
Kanapathipillai Gnanaretnam

**A Comparative Study Of Formal And Non-formal Education Systems**
Shiyani Thevaruban

**நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு**
முனைவர் வி. ஜெயஸ்ரீ பிரியதர்ஷினி1, எல். பஷீரா பேகம்2

**நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு**

**The Architecture of Thirunallūr Kalyānasundharēswarar Attic (Māda) Temple in Thiruvarur District, Tamil Nadu**
P.PRAVEENKUMAR

**Educational and Intervention, Impact a case study on Nilgiris and Chennai Slums**
Dr. S.Udhaya Kumar.

**தொல்காப்பியம் புறத்திணையியல் மானுடவியல் விழுமியங்கள்**
முனைவர் செ. சாந்தி

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி


தமிழ்

# இந்தியத் தத்துவத்தின்வழி இலக்கியத்தில் இருத்தலியல்

*Existentialism in Literature through Indian Philosophy*

**முனைவர் நா. ஜிதேந்திரன்,**
**துறைத் தலைவர் (ம) உதவிப்பேராசிரியர்,**
**தமிழ்த்துறை, அரசுக் கல்லூரி, காரியாவட்டம்,**
**திருவனந்தபுரம் -695581.**
**(கேரளப் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது)**

**ஆய்வுச் சுருக்கம் :**

இருத்தலியல் தத்துவம் இந்தியத் தத்துவத்தோடு பொருந்துகிறது. இருத்தலியல் தத்துவம் குறிப்பிடும் 'இறை' என்பது இந்தியத் தத்துவத்தில் பிரம்மம், காந்தம், எல்லையற்ற பெருவெளி எனப்படுகிறது. இருத்தலியல் தத்துவம் குறிப்பிடும் 'இறை மறுப்பு' என்பது பௌத்தம் மரபுடன் பொருந்துகிறது. இருத்தலியல் தத்துவம் குறிப்பிடுகிற துயரம், நிலையாமை, பிறப்பு, மரணம், உலகம், கடவுள், பேரண்டம், தனிமனிதன், பேரண்டத்திற்கும் தனிமனிதனுக்குமான உறவு, தனிமனித சுதந்திரம், சமூக வெறுப்பு, வாழ்வின் அர்த்தம் தேடல், வாழ்வின் அவலம் ஆகியன குறித்து இந்தியத் தத்துவம் நிறையவே பேசியிருக்கிறது. இருத்தலியல் தத்துவம் இந்திய இலக்கியத்தில் வங்காளம், மராத்திய மொழி, அஸ்ஸாமிய மொழி, கன்னடம், மலையாளம், தெலுங்கு எனப் பல மொழிகளின் படைப்புகளில் இடம்பெற்றுள்ளது. தமிழில் இதிகாசங்கள், கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், நாடகங்களில் இருத்தலியல் தத்துவம் இடம்பெற்றுள்ளது.

**திறவுச் சொற்கள் :** எக்ஸிஸ்டென்ஷியலிஸம், இருத்தலியல், இந்தியத் தத்துவம், தனிமனிதன், சோரன் கீர்க்கெகார்ட், நீட்ஷே, ஆல்பெர் காம்யு, ழான் பால் சார்த்தர், ஓஷோ, சூர்யவம்சம், சம்பத், இடைவெளி.

***Abstract :***

*Existentialism is compatible with Indian philosophy. The 'God' mentioned by existentialism is called Brahman, magnetism, and the infinite universe in Indian philosophy. The 'denial of God' mentioned by existentialism is matching with Buddhism. Indian philosophy has spoken a lot about the suffering, impermanent, birth, death, the world, God, the universe, the individual, the relationship between the universe and the individual, individual freedom, social hatred, the search for the meaning of life, and the suffering of life that all aspects of existentialism philosophy. Existentialism is present in the works of many languages in Indian literature, including Bengali, Marathi,*

*Assamese, Kannada, Malayalam, and Telugu. In Tamil, existentialism is present in epics, poems, short stories, novels, and plays.*

***Key words** : Existentialism, Iruthaliyal, Indian philosophy, Individual Man, Soren keirkegard, Nietszche, Alber Camus, Jean Paul Sartre, Osho, Suryavamsam, Sambath, Idaiveli.*

**இந்தியத் தத்துவமும் இருத்தலியல் தத்துவமும் :**

நான் யார்? , என் பிறப்பு, இறப்பு ரகசியம் என்ன? உலகைப் படைத்தது யார்? வாழ்வின் துன்பத்திற்கு என்ன காரணம்? வாழ்விலிருந்து, துன்பத்திலிருந்து விடுபடுவது எப்படி? என்ற கேள்விகளுக்கு விடை காண முயல்வதுதான் தத்துவம். இத்தகைய அடிப்படைக் கேள்விகளுக்கான விடையைத் தேடுவதில் இந்தியத் தத்துவத்திற்கும்;, மேலைத் தத்துவத்திற்கும் வேறுபாடுகள் இல்லை. அதேநேரத்தில் இரண்டின் அணுகுமுறைகளும் வெவ்வேறானவை. வாழ்வு உணர்த்தும் துன்பங்களிலிருந்து மனிதன் விடுதலை பெற எண்ணுகிறான். இந்த விடுதலை எண்ணம் இருத்தலியலின் கருத்தாக்கம். இதே விடுதலை எண்ணம் தான் இந்தியத் தத்துவத்தின் அடிப்படையும். அழியக்கூடிய இந்த உலகம் மாயை. அழியக்கூடிய இந்த உடலும் மாயை. உலகில் துன்பத்தைத் தவிர வேறெதுவுமில்லை. ஆக, உலகை மறுக்கச் சொல்கிறது இருத்தலியல். அதையேதான் இந்தியத் தத்துவமும் சொல்கிறது. இருத்தலியல் தத்துவம் இந்தியத் தத்துவத்தோடு எப்படிப் பொருந்திப் போகிறது என்பதையும், இந்திய இலக்கியத்திலும், தமிழ் இலக்கியத்திலும் எப்படி இடம்பெற்றிருக்கிறது என்பதையும் இக்கட்டுரை விளக்குகிறது.

இந்தியத் தத்துவம் தன்னை அறியும் தேடலிலிருந்து தொடங்குகிறது. இருத்தலியல் மனிதன் இறுதியில் அங்குதான் வந்து சேர்கிறான். ஆனால், சுமார் இரண்டாயிரம் வருடங்கள் தாமதமாக வந்துசேர்கிறான் இருத்தலியல் மனிதன் - அதாவது ஐரோப்பிய மனிதன். துயரம், நிலையாமை, மரணம், நான் யார்? என்பவை இரண்டிற்கும் பொதுவான அடிப்படை. இந்தியத் தத்துவம் முழுமைக்கும் நிலையாமையும், மனித வாழ்விற்கு அர்த்தம் தேடும் போக்கும் அடிப்படையாக இருக்கிறது. மனிதனைக் குறித்தும், மனித வாழ்வைக் குறித்தும் மிகத் தீவிரமாய்ப் பேசியது இந்தியத் தத்துவம். உலகைப் படைத்தது யார் ? என்பதில், இறைவன் அல்லது இறை என்பதில் மிகுந்த அக்கறை செலுத்தியது. உலகம், பிரபஞ்சம், பேரண்டம் என்பதோடு மனிதனின் வாழ்நிலையைக் கணக்கில் கொண்டது. வேதாந்திகளும், சித்தாந்திகளும் மனித வாழ்விற்கு அர்த்தம் தரத் தொடங்கினர். வேதங்களைப் படைத்தனர். கதைகளின் மூலமாக வாழ்வை விளக்கினர். வாழ்வு பற்றிய அவர்களது விளக்கம் ஒருசாரார்க்கு சுகமான வாழ்க்கையாகவும், மறுசாரார்க்கு அடிமை வாழ்க்கையாகவும் அமைந்துவிட்டது. அவர்களின்

தேடல் சரியானதுதான். ஆனால் அவர்கள் கண்ட முடிவு சரியானதாக இல்லை. அது ஆதிக்க மனப்பான்மையோடு அமைந்துவிட்டது.

எல்லாத் தத்துவங்களும் கருத்துமுதல்வாதம், பொருள்முதல்வாதம் என இரண்டு பிரிவுகளை உள்ளடக்கியவை. வேத ஏற்புத் தத்துவங்களெல்லாம் கருத்துமுதல்வாதத்தில் அமைபவை. வேத மறுப்புத் தத்துவங்களெல்லாம் பொருள்முதல்வாதத்தில் அமைபவை. மனிதன் தன் அறிவைக் கொண்டு உலகத்தைத் தீர்மானிக்கிறான். அறிவு மற்றும் நம்பிக்கை என்ற இரண்டில் மனிதன் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தாக வேண்டும். இந்தியத் தத்துவம் நம்பிக்கையின்பாற்பட்டது. அது சொர்க்கம், நரகம், இறைவன்(இறை), தியானம், முக்தி, விடுதலை என்றவாறு அமைகிறது. இருத்தலியலின் இறைஏற்பும் நம்பிக்கையின்பாற்பட்டதே ஆகும். வறட்டுத்தனமான அறிவு அழிவைத் தருகிறது. அறிவு மனிதனிடத்தில் பிளவை ஏற்படுத்துகிறது. "அறிவின் மூலம் மனிதனுக்கு விடுதலை இல்லை என்று இருத்தலியல் அறிவித்தது. மனிதன் மீண்டும் தன் அடிப்படைகளை நோக்கி திரும்ப வேண்டும் என்று இருத்தலியல் கூறியது. பழங்கால கிரேக்க சமூகத்தை - மனிதனும் இயற்கையும் பிரிவுபடாத, அறிவும் உணர்வும் பிரிவுபடாத சமூகச் சூழலை - இருத்தலியல் மீண்டும் மனிதனுக்கு நினைவுபடுத்தியது. ஏசுவை(ப்) பற்றி மீண்டும் பேசியது."[1] என்று ஞானி குறிப்பிடுகிறார். இருத்தலியல், அறிவால் பிளவுபடாத ஆதிமனிதன் தன்மையை எடுத்துக்காட்டுகிறது என்பதை உணரலாம். மேலும் அவர் குறிப்பிடுகையில், "மேற்கத்தியனைக் காட்டிலும் இருத்தலியல் கிழக்குலகத்தவனை அதிகம் கவரும். தாவோ, ஜென் ஆகியவற்றைப் பற்றிய புரிதல்கள் உள்ளவருக்கு இருத்தலியல் மிக எளியவகை மெய்யியல். மனித அனுபவ உலகத்தை அறிவியலால் புரிந்துகொள்ள முடியாது."[2] என்று இந்தியத் தத்துவத்திற்கும் இருத்தலியலுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை விளக்குகிறார். இங்கு கிழக்குலகத்தவன் என்பது இந்தியன்.

இறைவன் / இறை என்பதில் இரண்டிலும் பொதுமைக் கருத்துக்கள் நிலவுகின்றன. இறை ஏற்பு, இறை மறுப்பு என்ற போக்குகள் இரண்டிலும் உள்ளன.

முதலாவதாக, இறை ஏற்பு என்பதில், இறைவன் / இறை என்பதனை அடைய முடியும் என்பதான கௌதமர் (நியாயம்), கபிலர் (சாங்கியம்), சங்கரர் (இராமானுஜர்), வள்ளலார், வேதாத்திரி மகரிஷி முதலியோரின் கருத்தை சோரன் கீர்க்கெகார்ட், மார்ட்டின் ஹைடெக்கர் முதலியோரிடத்திலும் காண முடிகிறது. வேதங்களில் கூறப்படும் பொருளிலான இறைவன் / இறை என்பதனை மறுக்கும் போக்கு புத்தர், மகாவீரர், சித்தர்கள், பெரியார் முதலியோரிடத்தில் காணப்படுதல் போல, நீட்ஷே, ஆல்பெர் காம்யு, ழான் பால் சார்த்தர் முதலியோரிடத்திலும் இக்கருத்தைக் காணமுடிகிறது.

மார்ட்டின் ஹைடெக்கரைப் பற்றி ஞானி குறிப்பிடும்பொழுது, “இறை என்பது கடவுளல்ல. இறை என்பது பிரபஞ்சம். இயற்கை. இவற்றோடு இவன் கொள்ளும் உறவு, மௌனம். தனிமனிதன் தன்னை அனைத்தினுள்ளும் கரைத்துக் கொள்ள வேண்டும். பொருளின் ஆதிக்கத்திற்கு இவன் உட்படும்பொழுது வீழ்ச்சி அடைகிறான் ; இறையிலிருந்து தன்னைத் துண்டித்துக் கொள்கிறான். இவன் வாழ்க்கை அவலம் மிக்கது. ஹைடேக்கரின் (இத்தகைய) நிலைப்பாட்டை ஒரு இந்தியன் என்ற முறையில் நான் புரிந்துகொள்ள முடியும்.”[3] என்கிறார். ஹைடெக்கரின் 'இறை' என்பதும், இந்தியத் தத்துவத்தின் 'இறை' என்பதும் ஒன்றுதான் என்பது இங்கு புலப்படுகிறது.

இறை என்பதனைப் 'பிரம்மம்' என்று வேதம் குறிப்பிடுகிறது. ஹெகல் இதனைப் 'பேரிறைமை' என்றும், 'முழுமுதல்கருத்து' என்றும் குறிப்பிடுகிறார். பிரம்மம் பற்றிய ஹெகலின் இத்தகைய சிந்தனையானது இந்தியத் தத்துவத்தின் சிந்தனைப் போக்கு. ஹெகலின் கருத்தானது, “பிரம்மம் என்று நமக்குத் தெரிந்த சொல்லில் குறிப்பிடக்கூடிய பேரிறைமை தன் தனிமையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் முறையில் பிரபஞ்சமாக வடிவெடுத்தது. இயக்கத்தின்போது பிரபஞ்சம், ஒன்றிலிருந்து இன்னொன்றாக மாறி, இறுதியில் ஓரறிவு உயிராகி, இத்தகைய பொருள் உருவில் தன்னை மாற்றிக் கொண்ட பொழுது தன்னை இழந்து, தன்னை மறந்து, தொடர்ந்து தனக்குத் தானே இயங்கி, பரிணாம முறையில் மனிதனாகி, அப்புறம் ஜெர்மானியனாகி, அப்படி ஜெர்மானியன் ஆகிய பொழுதுதான் தன்னைத்தானே பேரிறைமை என்று அறிந்து கொண்டது. ஆதியிலிருந்த பேரிறைமையே தனக்குள் இப்படி அந்நியமாகி இறுதியில் தன்னைத் தானே பேரிறைமை என்று அறிந்து கொண்டபோது தன் சுய அந்நியமாதலிலிருந்து விடுதலை பெற்றது.”[4] என்று ஞானி குறிப்பிடுகிறார். இக்கருத்து இந்தியத் தத்துவத்தோடு முழுவதும் ஒத்துப்போகிறது. இது இந்தியத் தத்துவத்தின் தற்போதைய கடைசி ஞானியான வேதாத்திரி மகரிஷி வரைக்குமான அத்தனை ஞானியர்களின் கருத்துமாகும்.

இந்தியத் தத்துவத்தில் 'இறை' என்பது பிரம்மம் (வேதங்கள்), எல்லையற்ற பெருவெளி, வெளி, வெட்டவெளி (சித்தர்கள்), சுத்தவெளி, காந்தவெளி (வேதாத்திரி மகரிஷி) என்று பலவாறாகக் குறிக்கப்பெறுகின்றது. இதைப் போலவே இருத்தலியலிலும் எல்லையற்ற பெருவெளி (பாஸ்க்கால்), காந்தப் பெருவெளி (மார்ட்டின் ஹைடெக்கர்) என்று குறிக்கப்பெறுகின்றது.

இரண்டாவதாக, இறைமறுப்பு என்பதில், நீட்சே 'கடவுள் இறந்துவிட்டார்' என்று அறிவித்தார். ஓஷோ 'கடவுள் தற்கொலை செய்துகொண்டார்' என்று அறிவித்தார். நீட்சேவின் மற்றொரு வாசகம் 'கடவுள்கள் இருந்தால் நான் ஏன் கடவுளாகவில்லை? *(If there are Gods why am I not a God?)*'”[5] இந்தக் கேள்வி இந்திய மனதின் கேள்விதான். ஒவ்வொரு

மனிதனுக்கும் தான் கடவுளாக வேண்டும் என்ற ஆசை உண்டு. நீட்சேவுக்கும் அந்த ஆசை இருந்தது. இந்திய மனதின் வேட்கையோடு நீட்சே ஒத்துப்போகிறார். நீட்சேவின் அதீத மனிதன் தமிழ்ச் சித்தன்தான். நீட்சே மனிதனும் கடவுளாகலாம், கடவுளுக்கு நிகரான நிலையை அடையலாம் என்கிறார். அதைத்தான் சித்தர் தத்துவமும் வலியுறுத்திக் கூறுகிறது. ஆனால் நீட்சே அதற்கான வழிமுறையை அறியாதவர். சித்தர் மரபினைப் பற்றித் தெரியாதவர். “நீட்சே பாதிச் சித்தன். பாதிக் கிணறு தாண்டியவன்…. நீட்சேயிடம் தொடங்கி, சித்தர் நெறிக்கு வந்து, அதிமனிதன் ஆகும் கல்வி முழுமையடையும்.”[6] மேலைத் தத்துவம் நம்புகிற இயேசு கிறிஸ்துவின் மூன்றாம் நாள் உயிர்த்தெழுதல் என்பது சித்தர் தத்துவத்தில் ஏற்கனவே கூறப்பட்ட ஒன்றுதான். சித்தர்களின் மரணத்தை வெல்லுதலும், கூடுவிட்டுக் கூடுபாய்தலும் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலோடு தொடர்புடையது.

சித்தர் தத்துவமும் இருத்தலியலைப் போலவே தனிமனிதன் என்கிற அம்சத்தை; வாதத்தை மிகச் சிறப்பாக முன்வைத்தது. ஊர், உலகம், சமுதாயம், சுற்றம், குடும்பம், மனைவி, மகன் / மகள் என அத்தனை உறவுகளையும், பணம், புகழ், பதவி என புறஉலக நியதிகள் அனைத்தையும் மறுத்தது. தனிமனிதன் என்கிற கருத்தாக்கத்தை, சித்தர் தத்துவத்தைப் போல், வேறெந்த இந்தியத் தத்துவமும், அந்தக் காலகட்டத்தில் பேசவில்லை என்பது முக்கியமான அம்சமாகும்.

மேலும், நீட்சே ஐரதுஷ்டிரன் என்னும் அதீத மனிதனை அறிமுகப்படுத்தினார். ஓஷோ ஜோர்பா தி புத்தா என்னும் புதிய மனிதனை அறிமுகப்படுத்தினார். நீட்சே கடவுளை மறுக்கும் அதே நேரத்தில், ஐரதுஷ்டிரனில் மறுபிறப்பு பற்றிப் பேசுகிறார். இந்த மறுபிறப்புக் கொள்கை என்பது இந்தியத் தத்துவத்தில் ஏற்கனவே இருக்கிற ஒன்றாகும்.

சோரன் கீர்க்கெகார்ட் நிலையாமை, பாவத்தன்மை, மூலத்தீவினை என்று பேசுகிறார். இக்கருத்துக்கள் இந்தியத் தத்துவத்திலும் இருப்பவையாகும்.

மனிதனைப் பிரபஞ்சத்தோடு இணைத்துப் பேசுவது இந்தியத் தத்துவம். பிரபஞ்சத்தின் தன்மையே மனிதனிடத்தில் உள்ளது. பிரபஞ்சத்தில் பரமாத்மாவாக இருப்பது, மனிதனிடத்தில் ஜீவாத்மாவாக, உள்ளுணர்வாக இயங்குகிறது. இந்த உள்ளுணர்வு உள்ளொளி மூலமாக தீர்க்கதரிசனம் பெற முடியும். இறையைத் தன்னிலேயே உணர முடியும் என்பது இந்தியத் தத்துவம். இந்த உள்ளுணர்வு, தீர்க்கதரிசனம் பற்றியும் இருத்தலியல் பேசுகிறது.

“அண்டத்திற்கும் மனிதனுக்கும் உள்ள உறவு பற்றி இருத்தலியல் சொல்லுகிறது. கடவுள் பற்றி தன் காலத்திற்கான மதிப்பீடு ஒன்றை இருத்தலியல் கொண்டுள்ளது. சமூகத்தில் செயல்படும் சக்திகள் பற்றி இருத்தலியல் அதிகம் பேசுவதில்லை. உலகம், சமூகம் ஆகியவற்றின் சிதைவை வாழ்வின் சிதைவாக இருத்தலியல் காண்கிறது. மனிதன் பொருளுக்கு

அடிமைப்பட்டிருப்பது பற்றி இருத்தலியல் சொல்லுகிறது. அறிவைத் தவிர மனிதனுக்குள் இயங்கும் உள்ளுணர்வு - தரிசனம் பற்றி இருத்தலியல் அழுத்தமாகப் பேசுகிறது."[7] என்றும் ஞானி குறிப்பிடுகிறார்.

இந்தியத் தத்துவத்தில் முக்கிய இறைமறுப்புத் தத்துவமான பௌத்தம் இருத்தலியலுக்கு மிக அருகில் நெருங்கி வருகிறது. வாழ்வே துன்பமயம் என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பறைசாற்றியது. "காசி மாநகரில் ஆற்றிய விளக்கப் பேருரையில் அவர் (புத்தர்) கூறினார் : பிறவி துன்பமாகும். மூப்பு (வயோதிகம்) துன்பமாகும். பிணி துன்பமாகும். இறப்பு துன்பமாகும். நாம் காதலித்தவரோடு பிணைக்கப்படுவது துன்பமாகும். நாம் விரும்புகிறவர்களிடமிருந்து பிரிக்கப்படுவது துன்பமாகும். நாம் விரும்புவதை அடையாதிருப்பது துன்பமாகும். சுருங்கக் கூறின், ஐந்து ஆசைகளால் இவ்வுலகில் ஒட்டிக்கொண்டிருப்பது துன்பமாகும். ஆகவே, வியாதி, வயோதிகம், மரணம் இவை அனைத்தும் மக்களுக்கு எல்லையில்லாத் தொல்லைகளை ஏற்படுத்துவதைக் கண்டு அவரால் சகிக்க முடியவில்லை."[8] என்று ஏ.எஸ்.கே குறிப்பிடுகிறார். இதே சகிப்பின்மைதான் இருத்தலியல் மனிதனிடத்திலும் உள்ளது. புத்தரிடத்திலும் இருத்தலியல் அவலங்களைக் காண முடிகிறது. தனக்கான கடவுளைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் சுதந்திரமான இருத்தலியல் கூறு, சிறுதெய்வ வழிபாட்டில் இருப்பதை உணர முடிகிறது.

சாக்ரடீஸின் உன்னையே நீ அறிவாய் என்பது இந்தியத் தத்துவத்தில் சொல்லப்படுகிற ஒன்றாகும். பெரியாரின் கடவுளை மற; மனிதனை நினை என்ற கூற்றும் இருத்தலியல் கூற்றாகும். இருத்தலியலாளர்களைப் போலவே பெரியாரும் கறுப்புச்சட்டை அணிந்த தன்மையுடையவாராயிருக்கிறார். ஜே.கிருஷ்ணமூர்த்தியின் தனிமனிதனின் வாழ்வு குறித்த தேடலும் இருத்தலியல் கருத்தாகும்.

ஓஷோ கூறும் கிளர்ச்சியாளன் என்பவனும் இருத்தலியல்வாதிதான். ஓஷோ ஆண், பெண் வேறுபாடுகள் இல்லை. உயிர் ஒன்றே என்கிறார். அவர் மனிதனின் அனைத்து அடையாளங்களையும் துறக்கச் சொல்லிவிட்டு, தியானத்தைப் போதிக்கிறார். இருத்தலியலும் பால்வேறுபாடு உட்பட அனைத்து அடையாளங்களையும் துறக்கச் சொல்கிறது. ஆனால் தியானத்தைப் போதிக்கவில்லை.

இந்தியத் தத்துவம் முழுமைக்குமான நோக்கம் தனிமனித விமோசனம் ஆகும். ஆனால் இருபதாம் நூற்றாண்டில் அறிவியல்யுகப் புரட்சியின் காலச்சூழல் இந்தியத் தத்துவம் தோன்றிய காலத்தில் இல்லை. ஆனாலும், துயரம், நிலையாமை, பிறப்பு, மரணம், உலகம், கடவுள், பேரண்டம், தனிமனிதன், பேரண்டத்திற்கும் தனிமனிதனுக்குமான உறவு, தனிமனித சுதந்திரம்,

சமூக வெறுப்பு, வாழ்வின் அர்த்தம் தேடல், வாழ்வின் அவலம் ஆகியன குறித்து இந்தியத் தத்துவம் நிறையவே பேசியிருக்கிறது.

இறுதியாக, நீட்சேவின் ஜரதுஷ்டிரன் - மார்ட்டின் ஹைடெக்கரின் டாசய்ன் - ஆல்பெர் காம்யுவின் கலகக்காரன் - பௌத்தன் - சித்தன் - வீரசைவத்தின் சரணன் - ஓஷோவின் ஜோர்பா தி புத்தா - வள்ளலாரின் கருணை மனிதன் - பெரியாரின் கலகக்காரன் ஆகிய அனைவரும் ஒன்றே என்பதை உணரலாம்.

**இந்திய இலக்கியத்தில் இருத்தலியல் :**

இந்தியத் தத்துவப் போக்கில் காணப்படுகிற இருத்தலியல் இந்திய இலக்கியத்திலும் இடம்பிடிக்கிறது. சுதந்திரப் போராட்டக் காலத்தில் ஐரோப்பிய இருத்தலியல் அங்கொன்றும் இங்கொன்றுமாக படைப்புகளில் இடம்பெற்றது. அக்காலகட்டங்களில் இந்தியாவில் இருத்தலியல் பெரிதாகக் கவரப்படவில்லை. ஏனெனில் ஒட்டுமொத்த இந்தியாவும் சுதந்திரத்தை எதிர்பார்த்து நின்றது; நம்பிக்கையோடிருந்தது. தீவிர எழுச்சி நிலையில் இருந்தது. சுதந்திரம் பெற்ற பின்னர், நிலைமை தலைகீழாக மாறியது. எதிர்பார்த்த வாழ்க்கை அமையப் பெறவில்லை. சுதந்திரம் அர்த்தமற்றுப் போய்விட்டது. எதிர்பார்த்த சமூக விடுதலை அமையாமல் போனபோது ஏமாற்றம், நம்பிக்கையிழப்பு, வெறுமை போன்றவை மக்களிடத்தில் நிரம்பின. சுதந்திரம் தந்த ஏமாற்றம் இந்திய மனதை அடுத்த தளத்திற்கு நகர்த்தியது. ஒருபிரிவு மார்க்சியம், கம்யூனிசம் என்று நம்பிக்கை கொள்ளத் தொடங்கியது. மற்றொரு பிரிவு எக்சிஸ்டென்ஷியலிஸம், சர்ரியலிஸம், ஃப்ராய்டிஸம் என்று நகர்ந்தது. இத்தகைய கருத்தாக்கங்கள் படைப்புலகில் இடம்பெறத் தொடங்கின. ஐரோப்பியச் சிந்தனைப் போக்கை அறிந்தவர்களாகவும், ஆங்கில அறிவு பெற்றவர்களாகவும் ஒருசில படைப்பாளிகள் இருந்தமையால் இருத்தலியல் எளிதாக படைப்பிற்குள் வந்து நின்றது. இருத்தலியலை மையமாக வைத்துப் படைப்புகள் தோன்றாவிட்டாலும் பெரும்பாலான படைப்புகளில் இருத்தலியல் கூறுகளும், இருத்தலியல் சார்பு விளக்கங்களும், இருத்தலியலாளர்களின் பெயர்களும், இருத்தலியல் கதாபாத்திரங்களும் இடம்பெற்றன. 1950 முதல் 1970 வரை இருத்தலியல் இந்தியாவில் அதிகக் கவனம் பெற்றது. இங்குக் குறிப்பிடப்படும் இந்திய இலக்கியத்தில் இருத்தலியல் என்பது குறித்த தரவுகள் இணையதளத்திலிருந்தும், இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு என்கிற சிவசங்கரியின் தொகுப்பு நூலிலிருந்தும் மற்றும் இதர நூல்களிலிருந்தும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

இருத்தலியல் தனித்த துறையாக, 1930களில் முதன்முதலில் வங்காள மொழியில் அறிமுகமாகிறது. ஜெகதீஷ் குப்தாவின் அசாது சித்தார்த்தா , நித்திரதா கும்பகர்ணா நாவல்களில் இருத்தலியத்தின் தேர்வு குறித்து பேசப்படுகிறது. மானிக் பந்தோபாத்யாயாவின்

திபரத்ரிர் கப்யா , புதுல் நாசர் இதிகதா (பொம்மை நாட்டியத்தின் சரித்திரம்) ஆகிய நாவல்கள் தனிமனித சுதந்திரம் மற்றும் அபத்தம் குறித்து வெளிப்படுத்துகின்றன. புத்ததேவ் பாசுவின் சம்கட் , சதிநாத் பாதுரியின் சமரேஷ் பாபுவின் பிபார் , திப்யேந்து பாலித் என்பவரின் அம்ரா ஆகிய நாவல்கள் இருத்தலிய நாவல்களாக அடையாளம் காணப்படுகின்றன. வங்கக் கவிதைகளில் சுதீந்திரநாத் தத்தாவின் தஷமி (1956) இருத்தலிய உள்ளடக்கத்திற்கு மிகச் சிறந்த உதாரணமாகும். நாடகத்தில் பாதல் சர்க்காரின் ஏவம் இந்திரஜித், பக்ல கோடா, பாக்கி இதிகாஸ் என்பன மேடையேற்றத்திலும் வெற்றி பெறுகின்றன.

மராத்தியில் டி.கே.பெதேகர் ஹெகலிசத்தை அறிமுகப்படுத்துகிறார். நீட்சேவை அகிதக்னி ராஜவதே அறிமுகப்படுத்துகிறார். சார்த்தர், ஆல்பெர் காம்யு ஆகியோரின் நாடகங்கள் மொழிபெயர்க்கப்படுகின்றன. பிற இஸங்கள் ஏற்படுத்திய தாக்கத்தை இருத்தலியல் மராத்தியில் ஏற்படுத்தவில்லை. எனினும், புனே பல்கலைக்கழகத்தின் ஒப்பிலக்கிய ஆய்வேடு மராத்தியில் 24 நாவல்களை இருத்தலிய நாவல்களாகச் சுட்டுகின்றது. பாலசந்திர நிமதியின் கோஸ்லா , சி.டி.கனோல்கரின் திரிசங்கு , ஜெயவந்த் தாளவியின் ஸ்வாகத் , டி.வி.சர்தேஷ்முக் என்பவரின் பஹர் , கமல் தேசாயின் கலாசூர்யா , தினநாத் மனோகரின் ரோபாட் , சுபாஷ் சாவர்க்கரின் ஆத்மா ஆகியன அவற்றில் முக்கியமானவையாகும்.

அஸ்ஸாமிய மொழியில் அபத்த நாடகங்கள் எழுதப்பட்டன. அருண் சர்மாவின் ஆஹார் (உணவு), பஸந்த சைக்கியாவின் தானவ ஆரு மானவ (அரக்கனும் மனிதனும்), ம்ருகத்ரஸ்ஸா வும் முக்கியமான நாடகப் படைப்புகளாகும்.

கன்னட மொழியில் மாஸ்தியின் சுப்பண்ணா , ஆத்ய ரங்காச்சார்யா எனப்படுகிற ஆர்.வி.ஜகீர்தாரின் விஷ்வாமித்ரன ஷ்ருஷ்டி (1934) ஆகிய நாவல்களும், டி.ஆர்.பெந்த்ரேவின் சாயோ அத (மரணத்தின் விளையாட்டு) என்ற தனிநபர் நாடகமும் இருத்தலியத் தாக்கத்தில் எழுதப்பட்டவையாகும். பி.லங்கேஷின் பிருகு , பூர்ணசந்திர தேஜஸ்வியின் ஸ்வரூபா , சௌரியின் கலாடி மீனு (மஞ்சள் மீன்), கிரியின் கதி-ஸ்திதி என்பனவும் இருத்தலியல் படைப்புகளாக இதழ்களால் அடையாளம் காட்டப்படுகின்றன. யு.ஆர்.அனந்தமூர்த்தியின் சம்ஸ்காரா மிகச் சிறந்த இருத்தலிய நாவலாகும். அவருடைய மற்றொரு நாவலான அவஸ்தை யும் இருத்தலிய நாவலாகும். கவிதைகளில் கே.எஸ்.நரசிம்ம ஸ்வாமியின் தெறத பகிலு (திறந்த ஜன்னல்) சிறந்த இருத்தலியக் கவிதையாகக் குறிப்பிடப்படுகிறது. ஜி.வி.சிட்டல் என்பவரின் எலகே கவிதையும் இவ்வகையில் அடங்கும். பி.லங்கேஷ், சந்திரசேகர கம்பார், ஜி.பி.ஜோஷி, எஸ்.கே.தேசாய் ஆகியோரின் நாடகங்களிலும் இருத்தலியத் தாக்கம் இருக்கிறது.

மலையாளத்தில் 1950-களிலிருந்து இருத்தலியல் படைப்புகளில் இடம்பெறத் தொடங்குகிறது. கவிதைகளில் இருத்தலியல் இடம்பெறவில்லை. 1980-களில்

கே.ராகவன்பிள்ளை என்பவரின் சார்த்தரின்ட அஸ்தித்வதர்சனம் என்ற நூல் வெளிவருகிறது. ஆனந்த் என்பவரின் ஆள்கூட்டம், எம்.டி.வாசுதேவன் நாயரின் மன்னு ஆகியன இருத்தலியப் படைப்புகளாக அறியப்படுகின்றன. பிறமொழிகளோடு ஒப்பிடுகையில் மலையாளத்தில் மிகச் சிறிதளவே இருத்தலியல் கருத்து இடம்பெறுகின்றது. மலையாளச் சிறுகதைகளில் இருத்தலியத் தாக்கம் அதிகம் இடம்பெற்றிருக்கின்றன. குறிப்பாக, எம்.முகுந்தனின் சிறுகதைகளைக் குறிப்பிடலாம்.

தெலுங்கில் 1947-இல் ரச்சகொண்ட விஸ்வநாத சாஸ்திரியின் அல்பஜீவி வெளிவருகிறது. ஆர்.எஸ்.சுதர்ஷனத்தின் மல்லீ வசந்தம் (1960), பி.வி.சுப்பராவின் ஏமி செப்பண்டி (1963) ஆகிய நாவல்களும், ஆர்.வி.சாஸ்திரியின் நீடலு (நிழல்கள்), ஆர்.எஸ்.சுதர்ஷனத்தின் எருப்பு (சிகப்பு) ஆகிய சிறுகதைகளும் இருத்தலியப் படைப்புகளாக இடம்பெறுகின்றன.

இந்திய மொழிகளில் மேற்கூறப்பெற்றவை தவிர்த்த இதர மொழிகளிலும் இருத்தலியத் தாக்கங்கள் இடம்பெற்றிருக்கின்றன. அவை குறித்து விரிவாக வேறொரு கட்டுரையில் ஆராயலாம்.

**தமிழில் இருத்தலியல் :**

தமிழிலக்கியத்தின் முக்கியப் பாடுபொருள்களாகக் காதலும் வீரமும் அமைந்திருந்தன. அதனையடுத்து அரசும் சமயமும் பாடுபொருள்களாகியிருக்கின்றன. இதற்கடுத்த நிலையில், நிலையாமையும், வாழ்க்கையின் துயரங்களும், அவலங்களும் பாடுபொருள்களாக இருக்கின்றன. ஆனாலும் அவை தனிமனிதன் என்ற அளவில் இல்லாமல், ஒட்டுமொத்த மனிதகுலம் என்ற அளவில் அமைந்திருக்கின்றன. இனக்குழுச் சமூகமாக சேர்ந்து வாழ்கையில் தனிமனிதன் என்பவனோ, தனிமனிதனின் துயரம் என்பதோ கவனத்தில் கொள்ளப்படவில்லை. அரசன் மட்டுமே கருத்தில் இருக்கிறான். பிறகு கடவுள் இருக்கிறார். சித்தர்களின் காலத்தில்தான் தனிமனிதன் கவனம் பெறுகிறான். ஆனாலும் எல்லாவிதமான படைப்பு முயற்சிகளுக்குள்ளும் ஊடாடிக் கொண்டிருப்பது வாழ்வின் துயரம், மனித அவலம் என்பதாகும். துயரம் இல்லாமல், துன்பத்தைப் பாடாமல் இலக்கியம் இல்லை. வாழ்க்கை எதிர்பார்த்தது போல அமையாதபொழுது, தான் வாழ விரும்புகிற அல்லது தான் வாழ்ந்த வாழ்க்கையை, தான் காண விரும்புகிற அல்லது தான் கண்டுணர்ந்த உலகத்தைப் படைப்பில் கண்டு ஆறுதல் அல்லது பகிர்வு மனநிலையை அடைய இலக்கியம் உதவுகிறது. அவ்வகையில் இருத்தலியல் இலக்கியத்தில் இடம்பெறுகிறது. படைப்பில் துயரத்தைத் தவிர்க்க இயலாது.

இராமாயணத்தில் இந்திரஜித், இராவணன் உட்பட சீதை, இராமன், அகலிகை, தசரதன் முதலானோர் இருத்தலியல் துயரமாந்தர்கள் ஆவர். மகாபாரதத்தில் போர்க்களத்தில் நிற்கும்

அர்ஜூனனின் நிலையும் இருத்தலியல் மனநிலைதான். மேலும், கர்ணன், பீஷ்மர், சிகண்டி(அம்பை) போன்றவர்களும் இருத்தலியல் துயரமாந்தர்கள்தாம். சிலப்பதிகாரத்தில் கண்ணகியும் கோவலனும், மணிமேகலையில் ஆபுத்திரன், உதயகுமரன், காயசண்டிகையும் இருத்தலியல் மாந்தர்கள்தாம். இவர்கள் மட்டுமே இருத்தலியல் தன்மை கொண்டவர்கள் அல்லர். மேலும் நுட்பமாக ஆராய்ந்தால் பல இருத்தலியல் மாந்தர்களை அடையாளம் காண இயலும்.

சங்க இலக்கியத்தில் புறநானூற்றில் பல பாடல்களில் உலகம் நிலையாமை, வாழ்வு நிலையாமை ஆகியன பேசப்பட்டுள்ளன. ‘‘யாதும் ஊரே, யாவரும் கேளிர்’’ என்பது இருத்தலியலுக்குச் சிறந்த உதாரணம். அவரவர் வாழ்க்கைக்கு அவரவரே பொறுப்பு என்பதனை உணர்த்தும். ‘‘ தீதும் நன்றும் பிறர்தர வாரா என்பது இருத்தலியல் அறிக்கை.’’[9] நாகரத்தினம் கிருஷ்ணா அவர்கள் இதனைக் குறிப்பிடும்பொழுது, ‘‘செருப்புக்காகக் காலில்லை, காலுக்காகச் செருப்பு என்பதும் ஒருவகையில் இருத்தலியலே. இருத்தலியலின் தந்தையெனச் சொல்லப்படும் சொரன் கியெர்க்கார்டுவின் காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டு. அதற்கு முன்பே கணியன் பூங்குன்றனார் எழுதிய யாதும் ஊரே யாவரும் கேளீ(ளி)ர் என்னும் புறநானூற்றுப் பாடலூடாக இருத்தலியல் தமிழுக்கு அறிமுகமாயிருக்கிறது. அக்கவிதையில் வரும் மல்லல் பேரியாற்று நீர்வழிப் படூஉம் புணைபோல், ஆருயிர் முறைவழிப் படூஉம் மென்பது திறவோர் காட்சியின் தெளிந்தனம் என்பதும், தீதும் நன்றும் பிறர்தர வாரா வும் இருத்தலியல் வாதக் கருத்துக்களே.’’[10] என்று உறுதிசெய்கிறார். ஞானி அவர்களும் இதே கருத்தினைக் குறிப்பிடுகிறார். சங்க இலக்கியத்தில் நெடுமணல் போல.... மன்ற உலகத்துப் பிறரே என்றும் குறிப்பிடப்படுகிறது.

மனித இருப்பு, வாழ்வின் அவலம் குறித்து வள்ளுவம் சிறப்பாகச் சொல்கிறது.

‘‘நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் / பெருமை உடைத்து இவ்வுலகு’’

என்பதும், ‘‘உறங்குவது போலும் சாக்காடு உறங்கி / விழிப்பது போலும் பிறப்பு’’ என்பதும் இருத்தலியக் குறள்கள் என அறியலாம். ‘‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’’ என்பது இருத்தலியலின் அடிப்படை.

‘‘பாளையாம் தன்மை செத்தும், பாலனாம் தன்மை செத்தும்’’ என்று குண்டலகேசி கூறுகிறது. இதுபோன்ற குரல்களைத் தமிழிலக்கியம் முழுமைக்கும் காணலாம். ‘‘நீரிற்குமிழி யாக்கை’’ என்கிறது நீதிநெறி விளக்கம். மேலும், பல இலக்கியங்கள் யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை என்று புற உலக வாழ்வை மறுத்தன.

சித்தர்களைத் தமிழக இருத்தலியல்வாதிகள் எனலாம். சித்தர்கள் 'இது வாழ்க்கையல்ல' என்ற அனுபவத் தெளிவும், சமுதாய வெறுப்பும், தனிமை விருப்பமும் கொண்டவர்கள். மரணம், மரணமில்லாப் பெருவாழ்வு பற்றித் தீவிரமாகச் சிந்தித்தது சித்தர்கள் இலக்கியம். அது மனிதர்கள் அனைவரும் சமம் என்று கூறியது. பரிபூரண விடுதலையை வலியுறுத்தியது.

வள்ளலாரின் அருட்பாடல்களில், அருணகிரிநாதரின் திருப்பாடல்களில் இருத்தலியல் சிந்தனை இருப்பதைக் காணலாம். உலக வாழ்வின் மீதான வெறுப்பையும், அதிஉன்னத நிலைக்கான தேடலையும் இவர்களது பாடல்களில் காண இயலும்.

“சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே / சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே / ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர் / அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே” (திருவருட்பா. 5566) என்ற பாடலில் வள்ளலார் அர்த்தமற்ற அடையாளங்களைச் சாடுவதை அறியலாம். “வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்” என்ற வள்ளலாரின் கருணையும், “எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே” என்ற தாயுமானாரின் பேரன்பும் இருத்தலியல் கருத்துக்கள்தான். இவ்வரிகளில் 'மனிதன்' என்னும் நிலை கடந்து, விலங்குகள், தாவரங்கள் என்ற அளவில் அனைத்தும் சமமானவை என்ற கருத்து வெளிப்படுகிறது. இருத்தலியல், மனிதனிடத்தில் அத்தகைய பாகுபாடற்ற, வரையறையற்ற பெருங்கருணையைத்தான் எதிர்பார்க்கிறது.

பாரதியின் “தேடிச் சோறு நிதம் தின்று, பல சின்னஞ்சிறு கதைகள் பேசி... வேடிக்கை மனிதரைப் போலே வீழ்வேனென்று நினைத்தாயோ” என்ற வகையில் பாரதியும் ஒரு கலகக்காரன் ஆகிறார். “எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓர்நிறை, எல்லோரும் இந்நாட்டு மன்னர்” என்கிற வகையில் பாரதியின் சமத்துவத்தை உணரலாம். “நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ” என்பதில் மனிதன் குறித்த அவலத்தை உணரலாம். பாரதி, பெரியார் ஆகியோரின் 'கலகம்' என்கிற தன்மை இருத்தலியலுக்கானது ஆகும்.

இருபதாம் நூற்றாண்டின் கவிதை, சிறுகதை, நாவல் படைப்புகளின் பாடுபொருள் இருத்தலியலின் நம்பிக்கை வறட்சியாக அமைகிறது. 1940களிலிருந்து 'இருத்தலியல்' என்ற சொல்லாக, இருத்தலியல் என்ற தனித்த துறையாக இடம்பெறத் தொடங்குகிறது. நகுலனின் கவிதைகள் இருத்தலியல் அவலத்தையும், தனிமை உணர்வையும் வெளிப்படுத்துகின்றன. இருத்தலியலை உணர்த்தும் சிறந்த கவிதையாக கல்யாண்ஜியின் கவிதையொன்றை இங்குக் குறிப்பிடலாம்.

"தெரிந்து கொள்ளுங்கள் / நீங்கள் உங்களுடையது / என எழுதும் கவிதைக்கு / முன்பே வரிகள் இருந்தன. / நீங்கள் அமிழ்கின்ற ஆறு / ஏற்கனவே ஓடிக் கொண்டிருக்கிறது. / நீங்கள் பார்க்கின்ற சூரியன் / பார்த்திருக்கிறது எண்ணற்றவர்களை. / உங்களுடைய சாப்பாட்டுத் /தட்டில் இருக்கிற பருக்கைகளில் / நேற்றின் எச்சில் / உங்களுக்குப் பின்னாலும் / வர இருக்கிறார்கள் /நிறையப் பேர்கள் / அடித்தல் திருத்தல் அற்று."[11]

என்ற வரிகளில் இருத்தலியல் சிந்தனையைக் காண முடிகிறது.

அப்துல் ரகுமான் மனிதன் தன்னிலிருந்து அந்நியப்பட்டுவிட்டதை ஆலாபனையில் நாட்டுமிராண்டி என்னும் தலைப்பில் குறிப்பிடுகிறார். எந்த அடையாளங்களுமற்று பிறந்த மனிதன் இன்று மொழி, சாதி, மதம், நிறம் என்று தனித்தனி அடையாளமுள்ளவனாக ஆகிவிட்டான்.

"நீ சுதந்திரமாகத் திரிந்த / காற்றாக இருந்தாய் / நாமோ வண்ண பலூன்களுக்குள் / அடைபட்ட காற்றாக / இருக்கிறோம்"[12]

"நீ நாட்டில் விலங்குகளோடு / பயமில்லாமல் இருந்தாய் / நாமோ நாட்டில் / மனிதர்களுக்குப் பயந்துகொண்டு / வாழ்கிறோம்"[13]

என்கிறார். "நரகம் மற்றவர்கள்தான்" என்கிற கருத்தில் இக்கவிதை அமைந்திருக்கிறது. ஆத்மாநாம், புவியரசு, விக்ரமாதித்யன், மனுஷ்ய புத்திரன் முதலானோர் கவிதைகள் இருப்பு குறித்து அதிகம் அலசுகின்றன. இச்சிறு உதாரணங்களைத் தவிர்த்து, தமிழ்க் கவிதைகளை முழுமையாக ஆராய்ந்தால், அது தனித்த ஆய்வாக அமையும்.

புதுமைப்பித்தன் சிறுகதைகளில் நம்பிக்கை வறட்சியைக் காண முடியும். லா.ச.ரா., விந்தன், நகுலன், மௌனி போன்றோரின் படைப்புலகம் வாழ்வின் அர்த்தத்தையும், மனிதனின் இருப்பு, மரணம் குறித்த அவலத்தையும் வெளிக்காட்டின.

நாவல்களிலும் இருத்தலியல் கருத்துக்கள் இடம்பெற்றன. "அனைவரும் இருத்தலியலைப் பற்றிப் பேசினர். ஆனால் ஒருவர்கூட, முழுமையான இருத்தலியல் நாவலைப் படைக்கவில்லை. க.நா.சு.வின் பொய்த்தேவு மற்றும் அசுரகானம், தி.ஜானகிராமனின் மோகமுள், ஆர்.சண்முகசுந்தரத்தின் சட்டிசுட்டது ஆகிய நாவல்களில் ஒருசில இருத்தலியல் கூறுகளை நம்மால் காண இயலுமே தவிர, தமிழில் முழுமையான இருத்தலியல் நாவலொன்றை இதுவரைக்கும் யாரும் எழுதவில்லை. சா.கந்தசாமியின் சூர்யவம்சம் (1983) நாவல், இருத்தலியலுக்கு மிக நெருக்கமாக எழுதப்பட்டது எனலாம்."*[14] என்கிறார் க.நா.சு.

தமிழின் முதல் இருத்தலியல் நாவல் எது? என்பதில் அறிஞர்களிடையே முரண்பட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. குறிப்பிட்ட நாவலை சிலர் முதல் இருத்தலியல் நாவலாக ஏற்றுக்கொள்கிறார்கள். மற்றும் சிலர் அதனை மறுத்து, வேறு நாவலை முன்வைக்கிறார்கள். க.நா.சு.வின் வரிசைப்படுத்தலில் அவருடைய 'பொய்த்தேவு' நாவல் முதலில் இடம்பெறுகிறது. இ.பா.வின் 'தந்திரபூமி' நாவலைத் தமிழின் முதல் இருத்தலியல் நாவலாக ஞானி குறிப்பிடுகிறார். சுந்தர ராமசாமியின் ஜே.ஜே: சில குறிப்புகள் நாவலை கா.சிவத்தம்பி முதல் இருத்தலியல் நாவலாக அடையாளம் காட்டுகிறார். ஆனால், சாருநிவேதிதா இந்நாவலில் இருத்தலியலே இல்லை என்று வாதிடுகிறார். பெரும்பாலும் சம்பத்தின் 'இடைவெளி' நாவலே முதல் இருத்தலியல் நாவலாக (ஜெயமோகன்) ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

கசடதபற, கணையாழி, எழுத்து ஆகிய இதழ்களில் இருத்தலியல் படைப்புகளும், இருத்தலிய விவாதங்களும் இடம்பெற்றன. 1975-இல் எஸ்.வி.ராஜதுரை எழுதிய 'எக்சிஸ்டென்ஷியலிசம்' என்ற நூலே, இருத்தலியல் குறித்து வெளிவந்துள்ள நூல்களில் இன்றுவரை சிறந்த அறிமுக நூலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இருத்தலியல் பற்றி ஞானி பல கட்டுரைகளை எழுதியிருக்கிறார். "இத்தத்துவத்தைப் பின்பற்றுபவர்கள், கலை, இலக்கியம் மூலமாக, வாழ்க்கை அர்த்தமற்றது, நோக்கமற்றது என விளக்க முயலுகிறார்கள். வாழ்க்கையின் இருண்ட பகுதியையே இவர்கள் கையாளுகிறார்கள். எனவே தான், மரணம், தற்கொலை, துன்பம், விரக்தி மனப்பான்மை, லட்சியமற்ற தன்மை, அர்த்தமின்மை, தனிமை, பாலுணாவு போன்ற கருப்பொருட்கள் அதிகமாகக் கையாளப்படுகின்றன."15 என்று சுப.இரவீந்திரநாதன் குறிப்பிடுகிறார். முனைவர் சீமானம்பலம் இருத்தலியல் குறித்து நாவல்களில் ஆய்வு செய்துள்ளார். கட்டுரையாளரும் இருத்தலியல் குறித்து நாடகங்களில் ஆய்வு செய்துள்ளார்.

**அடிக்குறிப்புகள்**

1. ஞானி, எதிர் எதிர்க் கோணங்களில், ப.30
2. மேலது., ப.40
3. மேலது., ப.33
4. ஞானி, தமிழ் மெய்யியல் அன்றும் இன்றும், பக்.58,59
5. இரா. குப்புசாமி, நீட்சே, ப.18
6. மேலது., ப.34
7. ஞானி, எதிர் எதிர்க் கோணங்களில், ப.38
8. ஏ.எஸ்.கே., பகுத்தறிவின் சிகரம் : பெரியார் ஈ.வெ.ரா. - இந்திய தத்துவஞான விமர்சனம், ப.87
9. இ.பா., கணையாழி களஞ்சியம், பாகம் - 4, ப.117

10. நாகரத்தினம் கிருஷ்ணா, இருத்தலும் இல்லாமலும் இருப்பவன் மனிதன் , காலச்சுவடு 112, ஏப்ரல் 2009, ப.52.

11. கல்யாண்ஜி, கல்யாண்ஜி கவிதைகள், ப.76

12. அப்துல்ரகுமான், ஆலாபனை, ப. 150

13. மேலது., ப.152

14. K.N.S., Existentialist literature, p.1246., [www.google.com](www.google.com)

15. சுப.இரவீந்திரநாதன், ஒப்பிலக்கியப் பார்வை-தமிழும் ஆங்கிலமும், ப. 74.

*Foot notes :*

1. *Gnani, Ethir ethirk konangalil, p. 30*

2. *Above, p. 40*

3. *Above, p.33*

4. *Gnani, Tamil Meyyiyal anrum inrum, pg.58,59*

5. *Kuppusamy, R., Nietszche, p.18*

6. *Above, p.34*

7. *Gnani, Ethir ethirk konangalil, p. 38*

8. *A.S.K., Pagutharivin sigaram: Periyar E.Ve.Raa — Indhiyath thathuvagnana vimarsanam, p.87*

9. *I. Pa., Kanaiyazhi kalanjiam, Part — 4, p.117*

10. *Nagarathinam Krishna, Iruthalum illamalum iruppavan manithan , Kalachuvadu 112, April, 2009, p.52*

11. *Kalyanji, Kalyanji kavithaigal, p.76*

12. *Abdul Rahman, Aalaapanai, p.150*

13. *Above, p.152*

14. *K.N.S. Existentialist literature, p.1246,* [www.google.com](www.google.com)

15. *Ravindranathan, Suba., Oppilakkiyap parvai — Thamizhum Aangilamum, p.74*

**K.N.S. : Everyone is curious or talks about existentialism, but no one has yet produced a wholly existentialist novel in the language. We can strain our ideas and find existentialist semblances in novels like K.N.Subramanyam's Poi thevu and Asuraganam and T. Janakiraman's Mohamul and R.Shanmuga Sundram's Sattisuttadu but a wholly existentialist novel has not net been written in the language. It is unlikely that it will be S. Kandasamy's Suriyavamsham (1983) is the one novel which we have got the nearest to it. (K.N.S.,Existentialist literature, p.1246)*

**துணைநூற்பட்டியல் :**


1. அப்துல் ரகுமான், ஆலாபனை, கவிக்கோ பதிப்பகம், 1995.
2. இந்திரா பார்த்தசாரதி, கணையாழி களஞ்சியம், கலைஞன் பதிப்பகம், சென்னை, 2001.
3. இரவீந்திரநாதன், சுப., ஒப்பிலக்கியப் பார்வை — தமிழும் ஆங்கிலமும், சபாநாயகம் பப்ளிகேஷன்ஸ், சிதம்பரம், 2003.
4. ஏ.எஸ்.கே, பகுத்தறிவின் சிகரம்: பெரியார் ஈ.வெ.ரா., இந்தியத் தத்துவஞான விமர்சனம், சூலூர் வெளியீடு, கோவை, 2001.
5. கண்ணன் (ஆ.), காலச்சுவடு இதழ், நாகர்கோவில், ஏப்ரல்-2009.
6. கல்யாண்ஜி, கல்யாண்ஜி கவிதைகள், புதுமைப்பித்தன் பதிப்பகம், 2002.
7. குப்புசாமி, இரா., நீட்சே, தமிழினி பதிப்பகம், சென்னை, 2009.
8. ஞானி, எதிர் எதிர் கோணங்களில், காவ்யா பதிப்பகம், சென்னை, 2002.
9. ஞானி, தமிழ் மெய்யியல் அன்றும் இன்றும், காவ்யா பதிப்பகம், சென்னை, 2008.


*Reference books :*


1. *Abdul Rahman, Aaalaapanai, Kavikko publishers, 1995.*
2. *Indhira Paarthasarathy, Kanaiyazhi kalanjiam, Kalaignan publishers, 2001.*
3. *Ravindaranthan, Suba., Oppilakkiyap paarvai — Thamizhum Aangilamum, Sabanayagam publisers, Chithambaram, 2003.*
4. *A.S.K., Pagutharivin Sigaram : Periyar E.Ve.Raa., Sulur veliyeedu, Cbe, 2001.*
5. *Kannan (Editor), Kalachuvadu Ithazh, Nagercoil, April, 2009.*
6. *Kalyanji Kavithaigal, Puthumaippithan publishers, 2002.*
7. *Kuppusamy, Raa., Nietszche, Thamizhini publishers, 2009.*
8. *Gnani, Ethir ethir konangalil, Kavya publishers, 2002.*
9. *Gnani, Tamil meyyiyal anrum inrum, Kavya publishers, 2008.*


*****

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com